# செயலாற்றுகை அறிக்கை



2023

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்
கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## பணிப்பாளர் நயாகத்தின் வாழ்த்துச் செய்தி

2023 ஆம் ஆண்டு இலங்கையில் இறப்பர் அபிவிருத்தித் துறையின் திருப்பு முனையினை குறித்துக் காட்டிய ஆண்டாக அறிமுகப்படுத்த முடியும். ஆரம்பம் தொடக்கம் இறப்பர் செய்கைக்காக பல்வேறுபட்ட மானிய உதவி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதுடன், இதற்காக நிதியம் செயற்படுத்தப்பட்டது. இறப்பர் செய்கைக்காக இது வரையில் காணப்பட்ட மானிய உதவி வேலைத்திட்டங்களை மாற்றியமைத்து, 2023 ஆம் ஆண்டு தொடக்கம் செய்கையாளர்களுக்கு தேவையான தரத்தில் உயர்ந்த ஒட்டு இறப்பர் கன்றுகளை மானிய வேலைத்திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கு அமைய சிறு தோட்ட உரிமையாளர்களுக்காக புதிய செய்கை மற்றும் மீள் செய்கை வேலைத்திட்டத்தின் கீழ் 742 ஹெக்டயர் நிலப்பரப்பிற்கு திணைக்களத்தினால் ஒட்டு இறப்பர் கன்றுகள் 597,655 இலவசமாக வழங்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நீண்டகாலம் தொடக்கம் காணப்படும் இறப்பர் காணி அளவினை உறுதிப்படுத்திக் கொள்ளும் பிரச்சினைக்குத் தீர்வாக, இறப்பர் காணி புள்ளிவிபரங்களை திரட்டும் செயற்பாடுகள் 2023 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதனை 2024 ஆம் ஆண்டுக்குள் முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதில் இறப்பர் துறைக்குரியதாக மிகச் சரியான தகவல் முறைமையினை தாபிப்பதற்கு வாய்ப்பு கிடைக்கும்.

ஆண்டு பூராகவும் காணப்பட்ட கூடுதலான மழைவீழ்ச்சி, இலையுதிர் நோய் பரவுதல், இறப்பருக்காக உயரிய நிலையான விலை கிடைக்காமை போன்ற விடயங்கள் காரணமாக வருடாந்த உற்பத்தி முன்னைய ஆண்டிற்கு இணைவாக வீழ்ச்சியடைந்ததுடன் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டில் பயன்படுத்தப்பட்ட இயற்கை இறப்பர் அளவும், முன்னைய ஆண்டிற்கு இணைவாக குறைவடைந்துள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் இறப்பர் சார்ந்த உற்பத்தி ஏற்றுமதியின் மூலம் 2023 ஆம் ஆண்டுக்குள் 930 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாக ஈட்டுவதற்கு இறப்பர் அபிவிருத்தித் துறைக்கு முடிந்துள்ளமை மகிழ்சிக்குரிய விடயமாகும்.

**சீ.சீ. முஹம்தரம்கே**
**பணிப்பாளர் நாயகம்**
**இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்.**

# உள்ளடக்கம்

*நோக்கு, பணிக்கூற்று, நிறுவனத்தின் நோக்கம்* 1

**1. அறிமுகம் 02-08**

1.1. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் 2
1.2. இறப்பர் செய்கை 2
1.3. இறப்பர் கைத்தொழில் 2
1.4. நிறுவனத்தின் பிரதான பணிகள் 3
1.4.1.பிரதான அலுவலகத்தின் பணிகள் 3
1.4.2.பிரதேச அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகள் 3
1.4.3.இறப்பர் கன்று நாற்றுமேடைகளின் பணிகள் 4
1.5. இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் ஒழுங்கமைப்ப கட்டமைப்பு 5
1.6. இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு 6
1.7. திணைக்களத்தின் பணியாளர் தவல்கள் 7-8

**2. திணைக்களத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்ட பிரதான பணிகளின் முன்னேற்றங்கள் 09-30**

2.1. இறப்பர் மீள் செய்கை 09
2.1.1.இறப்பர் மீள் செய்கை – சிறு தோட்டப் பிரிவு 09
2.1.2.இறப்பர் மீள் செய்கை – பெருந் தோட்டப் பிரிவு 11
2.2. இறப்பர் புது செய்கை 12
2.2.1.இறப்பர் புது செய்கை – சிறு தோட்டப் பிரிவு 12
2.3. இறப்பர் கன்று உற்பத்தி 13
2.3.1.அரசாங்கத்தின் நாற்று மேடைகள் 13
2.3.2.கன்று உற்பத்தி (தனியார் நாற்று மேடை) 15
2.4. மழைக்கவசங்களை இடும் வேலைத்திட்டம் 15
2.5. இடைக்காலப் பயிற்செய்கை 17
2.6. இறப்பர் செய்கைசார்ந்த பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்துதல் 18
2.6.1.பால் வெட்டும் திறன் பயிற்சி (பொது) 18
2.6.2.ஒட்டுநர் பயிற்சி 19
2.6.3.கேகாலை பிராந்திய அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்கள் 19
2.7. இயற்கை இறப்பர் கைத்தொழில் சார்ந்த தகவல்கள் - 2023 20
2.7.1.இறப்பர் செய்கை நிலப்பரப்பு அளவு 20
2.7.2.இலங்கையில் இயற்கை இறப்பர் உற்பத்தி -2023 20
2.7.3.இறப்பர் உற்பத்தி செலவினம் 21
2.7.4.இயற்கை இறப்பர் ஏற்றுமதி 21
2.7.5.இலங்கையில் மொத்த இறப்பர் ஏற்றுமதி 22
2.7.6.இயற்கை இறப்பர் இறக்குமதி 23
2.7.7.மொத்த இறப்பர் இறக்குமதி 24
2.7.8.இறப்பர் விலை 25

2.7.8.1. இறப்பர் வர்த்தகர்களினால் விவசாயிகளிடமிருந்து இறப்பர் பெற்றுக் கொண்ட விலையில் மதாந்த சராசரி 25
2.7.9.சர்வதேச இறப்பர் விலை 27
2.8. அனுமதிப்பத்திர இறப்பர் வர்த்தகர்கள் தொடர்பான தகவல்கள் 27
2.9. கூட்டிணைந்த நிதியம் 28
2.10. செஸ் வரி அறவீடு 29

**3. 2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த நிதி செயற்சாதனை 31-45**

3.1. நிதி செயற்சாதனை வெளிப்பாடுகள் 31
3.2. ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தும் செயற்சாதனை 32
3.3. நன்கொடை மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் தொடர்பான செயற்சாதனை 33
3.4. நிதியல்லாத சொத்துக்களை அறிக்கைப்படுத்தும் செயற்சாதனை 33
3.5. கணக்காய்வாளரின் அறிக்கை 34
3.6. நிதி நிலமை தொடர்பான வெளிப்பாடுகள் 42
3.7. நிதிப் பாய்ச்சல் தொடர்பான வெளிப்பாடுகள் 44

**4. செயற்சாதனை சுட்டி 46**

4.1. நிறுவனத்தின் செயற்சாதனை சுட்டி (செயற்பாட்டுத் திட்ட. அடிப்படையில்) 46

**5. நிலையான அபிவிருத்தி நோக்கினை எட்டுவதற்கான செயற்சாதனை 47-48**

5.1. அடையாளம் காணப்பட்ட உரிய நிலையான அபிவிருத்தி நோக்கு 47
5.2. நிலையான அபிவிருத்தி இலக்கினை எட்டுவதற்கான வெற்றி மற்றும் சவால் 47

**6. மானிடவள பக்கத் தோற்றம் 49-52**

6.1. ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம் 49
6.2. மானிட வள அபிவிருத்தி 49
6.3. அரச நாற்று மேடைகளின் எண்ணிக்கை - 2023.12.31 ஆம் திகதியன்று 50
6.4. நிறுவனத்தின் செயற்சாதனைக்கான பயிற்சி வேலைத்திட்டங்களின் பங்களிப்பு 50
6.5. 2023 ஆண்டின் நிர்மாண முன்னேற்றங்கள் 51

**7. ஒப்பீட்டு அறிக்கை 53-59**

## நோக்கு

இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தியிற்காக பெருந்தோட்ட கைத்தொழில்துறையின் முன்னனி பங்காளாராக செயற்படல்.

## பணிக்கூற்று

சட்டரீதியாக திணைக்களத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பணிகளுக்கு அமைவாக இலங்கையின் இறப்பர் செய்கை மற்றும் இறப்பர் செய்கை சார்ந்த கைத்தொழிலின் பண்புசார் தரம் மற்றும் அளவியல் அபிவிருத்தியிற்காக விவசாய பரவலாக்கள் சேவையினை அமுல்படுத்தல்.

## நிறுவனத்தின் நோக்கு

- காணப்படும் இறப்பர் செய்கை காணிகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்தல் மற்றும் இறப்பர் நிலப்பரப்பின் அளவினை விருத்தி செய்வதன் மூலம் உள்நாட்டு இறப்பர் உற்பத்தியினை மேம்படுத்தல்.
- இறப்பர் மற்றும் இறப்பர் சார்ந்த உற்பத்திகளின் பண்புசார் தரத்தினை விருத்தி செய்வதன் மூலம் இறப்பருக்காக கூடுதலான விலையினை வழங்குதல் மற்றும் விவசாயிகளின் வருமானத்தினை மேம்படுத்தல்.
- இத் துறையில் தொழில்வாய்ப்புக்களை உருவாகுவதனை மேம்படுத்துவதன் மூலம் சமூக பாதுகாப்பினை உருவாக்குதல்.
- உள்நாட்டு மரத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக பங்களிப்பு வழங்குதல்.
- இயற்கை சூழலின் சமநிலையினைப் பாதுகாப்பதற்காக செய்கையின் நீடித்த நிலையான தன்மையினை உறுதிப்படுத்தல்.

# 1. அறிமுகம்

## 1.1. இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்

இலங்கையில் இறப்பர் கைத்தொழில் துறை தொடர்பில் அமுல்படுத்தப்பட்டுள்ள பிரதான நிறுவனமாக இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினை அறிமுகப்படுத்த முடியும். 1934 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட இத் திணைக்களம் ஆரம்பத்தில் இறப்பர் நிருவாகத்திணைக்களமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் 1994 ஆம் அண்டு தொடக்கம் அது இறப்பர் அபிவிருத்தித் திணைக்களமாக அறிமுகப்படுத்தப்படுகின்றது.

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் பரவலாக்கள் சேவைகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்காக இறப்பர் செய்கை பரவலாக காணப்படும் பரதேசங்களை தழுவக்கூடிய வகையில் கேகாலை, களுத்துரை, இரத்தினபுரி, காலி மற்றும் மெணராகலை ஆகிய மாவட்டங்களின் 5 பிரதேச அலுவலகங்கள் திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தரத்தில் உயர்ந்த பண்புசார் தரம் கொண்ட இறப்பர் கன்றுகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக திணைக்களத்தின் கீழ் வெலிகடமுல்ல, மரீகம, ஏகல் ஓயா, குறுகொட, கரபிஞ்ச, பதியதலாவ, குபுக்கன மற்றும் மித்தெனிய ஆகிய பிரதேசங்களில் நாற்றுமேடைகள் தாபிக்கப்பட்டுள்ளன.

## 1.2. இறப்பர் செய்கை

ஈரழிப்பு வலையங்களில் இறப்பர் செய்கைக்காக வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பு காணப்படுகின்றமையினால் தற்போது இறப்பர் செய்கையினை சம்பிரதாயமல்லாத இடைநிலை மற்றும் வரண்ட வலையங்களிலும் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இறப்பர் செய்கையிற்காக ஊழியர்களின் பற்றாக்குறையினைப் போன்று மழையுடன் கூடிய காலநிலை காரணமாக இறப்பர் பால் அறுவடையினைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நாட்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளமை, நோய் பரவுதல் ஆகிய பிரச்சினைகளுக்கு சாதகமான தீர்வுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

சம்பிரதயாம் அல்லாத பிரதேசங்களில் பெருந்தோட்ட செய்கையாக இறப்பர் செய்கைக்காக காணப்படும் கேள்விகள் கிரமமாக அதிகரித்தச் செல்கின்றது. இது இறப்பர் செய்கைக்கான சாதகமான நிலமையாகும்.

## 1.3 இறப்பர் கைத்தொழில்

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இறப்பர் செய்கை ஆரம்பத்தில் ஏற்மதியினை நோக்காக் கொண்டு அமுல்படுத்தப்பட்டது. தற்போது ஒரு வருடத்திற்கு 01 பில்லியனுக்கு அண்மித்த ஏற்றுமதி வருமானம் இறப்பர் செய்கைப் பிரிவின் மூலம் ஈட்டப்படுகின்றது.

ஆரம்பத்தில் மூல (உலர்த்ப்படாத) இறப்பராக ஏற்றுமதி கூடுதலாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிற்காலத்தில் முதலீட்டு ஊக்குவிப்பு வலையம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இறப்பர் சார்ந்த முடிவுப் பொருள் உற்பத்தியினை மேற்கொள்ளும் செயற்பாடுகள் உள்நாட்டில் கூடுதலாக இடம்பெற்றுள்ளது. இதற்கு அமைய இறப்பர்சார்ந்த முடிவுப்பெருள் ஏறமதியினை அதிகரிப்பு இடம்பெற்றுள்ளதுடன், அது ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளது.

## 1.4. நிறுவனத்தின் பிரதான பணிகள்

### 1.4.1 பிரதான அலுவலகத்தின் பணிகள்

- பிராதான சட்டங்கள் மற்றும் சட்ட மூலங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை அமுல்படுத்தல்.
- மீள் செய்கை மற்றும் புதுச் செய்கை மானிய உதவித் திட்டத்தை அமுல்படுத்தல் மற்றும் பிராந்திய அலுவலகத்தினால் மானிய உதவியினை வழங்குவதனை மேற்பார்வை செய்தல்.
- அரசாங்கத்தின் நாற்று மேடைகள் மூலம் உயர் தரத்திலான ஒட்டு இறப்பர் கன்றுகளை உற்பத்தி செய்தல் மற்றும் வழங்குதல்.
- இறப்பர் செய்கை மற்றும் வர்த்தகத்திற்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குததல்.
- இறப்பர் செய்கை நிலப்பரப்பு அளவு, உற்பத்தி, உள்நாட்டுப் பயன்பாடு, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பான புள்ளிவபரங்கள் மற்றும் தகவல்களை சமகாலப்படுத்தி முன்னெடுத்தல்.
- இறப்பர் சந்தை தொடர்பாக சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களை அறிவுறுத்தல்.
- இயற்கை இறப்பர் உற்பத்தி, நுகர்வு மற்றும் சந்தை தொடர்பான சர்வதேச அமைப்புக்களுடன் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- செஸ் நிதியத்தை சேகரித்தல் மற்றும் நிருவாகம்.
- இறப்பர் செய்கையின் மற்றும் உற்பத்தியின் அவ்வவ் பருவங்களில் உரிய சிறு தோட்ட காணி உரிமையாளர்களுக்கு தேவையான அறிவு மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.
- சிறு தோட்ட உரிமையாளர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக செயற்பாடுகளை ஒழுங்கு செய்தல் மற்றும் அமுல்படுத்தல்.
- இறப்பர் துறையின் உற்பத்தித் திறன் மற்றும் உற்பத்தியினை மேம்படுத்துவதனை நோக்காக் கொண்டு அரச கொள்கையினை அமுல்படுத்தல் மற்றும் அதற்காக முன்னனி நிறுவனமாக செயற்படல்.
- அரச வருமானங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் சேகரித்தல்.
- பிராந்திய அலுவலகங்களை மேற்பார்வை செய்தல்.

### 1.4.2. பிராந்திய அலுவலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள்

- இறப்பர் செய்கைக்காக அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் காணிகளைப் பதிவு செய்தல்.
- இறப்பர் மீள் செய்கை மற்றும் புது செய்கையினை மேற்கொள்ளல்.

- செய்கையாளர்களுக்காக செய்கை மானிய உதவி வழங்குதல் உட்பட ஏனைய சேவைகளை வழங்குதல்.
- இறப்பர் வர்த்தக உரிமையாளர்களுக்காக வர்த்தக அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.
- அரசாங்கத்தின் இறப்பர் கன்று நாற்று மேடைகளை முன்னெடுத்தல், இறப்பர் கன்று விநியோகம் மற்றும் தனியார் கன்று நாற்றுமேடைகளை மேற்பார்வைகளை மேற்கொள்ளல்.
- சிறு தோட்ட உரிமையாளர்கள் மற்றும் தோட்ட உரிமையாளர்களுக்காக தேவையான தொழில்நுட்ப அலோசனைகளை வழங்குதல்.
- இறப்பர் செய்கைக்கு ஏற்படும் நோய்கள் தொடர்பில் இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தை அறிவுறுத்தி அதனை நோய் கட்டுப்பாட்டிற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- இறப்பர் செய்கை உரிமையாளர்களின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்காக வாழ்வாதார அபிவிருத்தி செயற்திட்டத்தை அமுல்படுத்தல்.
- இறப்பர் செய்கை தொடர்பான அறிவு மற்றும் பயிற்சியினை வழங்குதல்.

### 1.4.3. இறப்பர் கன்று நாற்றுமேடைகளின் பணிகள்.

- இறப்பர் ஆராய்ச்சி நிறுகத்தின் பரிந்துரைக்கு அமைய மீள் செய்கை மற்றும் புது செய்கைக்காக தேவையான தரங்கள் கொண்ட உயர் ஒட்டு இறப்பர் கன்றுகளை உற்பத்தி செய்தல்.
- .இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிவகத்தின் புதிய குலோனா கண்டுபிடுப்புக்களுக்கு அமைய விருத்தி செய்யப்பட்ட வகைகளை விவசாயிகளுக்கு அறமுகப்படுத்தல்.
- தேவையான சந்தர்பங்களில் பெருந்தோட்ட கம்பனிகளின் கன்று தேவையினை பூர்த்தி செய்தல்.
- இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தின் அராய்ச்சி செய்கைகளுக்காக தேவையான உதவிகளை வழங்குதல்.

## 1.5. இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு



## 1.6. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு



## 1.7. திணைக்கள பணியாளர் சபையின் தகவல்கள்

| தொடர்இலக்கம் | பதவி | அங்கீகரிக்கப்பட்ட அளவு | தற்போதுள்ள அளவு | வெற்றிட அளவு | மிகை அளவு |
|---|---|---|---|---|---|
| **01** | பணிப்பாளர் நாயகம் (இ. நி. சே) விஷேட தரம் | 1 | 1 | 0 | 0 |
| **02** | மேலதிக பணிப்பாளர் நாயகம் (இ. நி. சே) விஷேட தரம் | 1 | 1 | 0 | 0 |
| **03** | பணிப்பாளர் / பிரதேச பணிப்பாளர் (இ. நி. சே) I தரம் | 7 | 6 | 1 | 0 |
| **04** | பணிப்பாளர் (இ. தி. சே.- I ஆம் தரம்) | 1 | 1 | 0 | 0 |
| **05** | பணிப்பாளர் (திணைக்களமய) | 1 | 0 | 1 | 0 |
| **06** | பிரதம கணக்காளர் (இ.க.சே – 1 தரம்) | 1 | 1 | 0 | 0 |
| **07** | பிரதம உள்ளக கணக்காய்வாளர் (இ.க.சே. I அம் தரம்) | 1 | 1 | 0 | 0 |
| **08** | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (இ. நி. சே. II, III தரம்) | 12 | 8 | 4 | 0 |
| **09** | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (இ. தி. சே. II, III தரம்) | 1 | 1 | 0 | 0 |
| **10** | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (திணைக்களமய) | 1 | 0 | 1 | 0 |
| **11** | சட்ட உத்தியோகத்தர் (திணைக்களமய) | 1 | 0 | 1 | 0 |
| **12** | கணக்காளர் (இ.க.சே – II, III தரம்) | 6 | 5 | 1 | 0 |
| **13** | பிரதிப் பணிப்பாளர் (இ. தெ. மற்றும் தொ. தொ. சே. – II தரம்) | 1 | 0 | 1 | 0 |
| **14** | உதவிப் பணிப்பாளர் (இ. த. மற்றும் தொ. தொ. சே – III தரம்) | 2 | 1 | 1 | 0 |
| **15** | நிருவாக உத்தியோகத்தர் (அ .பொ. உ. சே.- விஷேட தரம்) | 4 | 3 | 1 | 0 |
| **16** | சிரேஷ்ட இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர் - பரவலாக்கள் (திணைக்களமய – விஷேட தரம்) | 17 | 7 | 10 | 0 |
| **17** | மொழி பெயர்ப்பாளர் சிங்களம் / தமிழ் (அ.மொ.சே) | 1 | 0 | 1 | 0 |
| **18** | தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தா் (இ. த. மற்றும் தொ. தொ) | 2 | 0 | 2 | 0 |
| **19** | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் (இ. த. மற்றும் தொ. தொ) | 5 | 2 | 3 | 0 |
| **20** | அபிவிருத்தி உத்தியோகத்தா் (அ. | 22 | 73 | 0 | 51 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உ. சே) | | | | |
| **21** | கட்ட பராமரிப்பு உத்தியோகத்தர் (திணைக்களமயம்) | 1 | 1 | 0 | 0 |
| **22** | முாகமைத்துவ சேவை உத்தியோகத்தர் (மு.கே.உ.) | 120 | 118 | 2 | 0 |
| **23** | முகாமைத்துவ உதவியாளர் (மு.சே.) | 7 | 6 | 1 | 0 |
| **24** | இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர் (திணைக்களமய) | 170 | 110 | 60 | 0 |
| **25** | சாரதி (சா.சே) | 40 | 21 | 19 | 0 |
| **26** | சாரதி (திணைக்களமயம்) | 1 | 0 | 1 | 0 |
| **27** | லொரி உதவியாளர் (திணைக்களமயம்) | 10 | 09 | 1 | 0 |
| **28** | அலுவலகப் பணி உதவியாளர் (அ. உ. சே.) | 33 | 29 | 4 | 0 |
| | **மொத்தம்** | **470** | **405** | **116** | **51** |

அட்டவணை இலக்கம் I

# 2. திணைக்களத்தினால் அமுல்படுத்தப்பட்ட பிரதான வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள்.

நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இறப்பர் செய்கைக்காக இது வரையில் காணப்பட்ட நிதி நிதிசார் மானிய உதவி வேலைத்திட்ட முறைகள் 2023 ஆண்டில் அமுல்படுத்தப்படவில்லை என்பதுடன், அதற்காக சிறு தோட்ட பிரிவிற்காக செய்கைக்ககு தேவையான ஒட்டு இறப்பர் கன்று மானிய உதவியாக வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக இறப்பர் செய்கைக்காக தேவையான பரவலாக்கள் சேவைகள் திணைகக்ளத்தினால் சிறு தோட்ட பிரிவினைப் போன்று பொருந்தோட்ட கம்பனிக்காவும் 2023 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட்டது.

இலங்கையில் இறப்பர் செய்கை பரவலாக்கள் மூலம் உள்நாட்டு பொருளாதாரத்தினை கட்டியெழுப்புவதனை நோக்காக் கொண்டு 2023 ஆம் ஆண்டில் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தினால் கீழ் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

1. **இறப்பர் மீள் செய்கை மேற்கொள்ளும் வேலைத்திட்டம் (சிறு தோட்டம்)**
2. **இறப்பர் புது செய்கை மேற்கொள்ளும் வேலைத்திட்டம் (சிறு தோட்டம்)**
3. **இறப்பர் கன்று உற்பத்தி**
4. **இறப்பர் செய்கை சார்ந்த பயிற்சி வேலைத்திட்டங்கள்**

**2023 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் பரவலாக்கள் சேவைகள் வழங்கப்பட்ட வேலைத்திட்டங்கள்,**

1. **இறப்பர் மீள் செய்கை வேலைத்திட்டம் (பெருந்தோட்ட கம்பனிப் பிரிவு)**
2. **மழைக் கவசத்தினை இடல் (சிறு தோட்ட / பெருந்தோட்ட கம்பனி)**
3. **இடைக்காலப் பயிற்ச் செய்கை**

## 2.1. இறப்பர் மீள் செய்கை

இறப்பர் செய்கை துறை உருவாக்கப்பட்டு 30 ஆண்டுகளுக்கு அண்மித்த காலங்கள் கடந்ததன் பின்னர் அச் செய்கையின் உற்பத்தித்திறன் கிரமமாக குறைவடைந்து செல்லும். இவ்வாறான இறப்பர் செய்கை காணிகளில் காணப்படும் பழைய செய்கையினை அகற்றி புதிய இறப்பர் கன்றுகளை நடும் செயற்பாடுகள் இறப்பர் மீள் செய்கையாக அறிமுகப்படுத்தப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டில் இறப்பர் மீள் செய்கைக்காக மானிய உதவியாக இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தினால் பண்புசார் தரம் கொண்ட உயர் ஒட்டு இறப்பர் கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

### 2.1.1. இறப்பர் மீள் செய்கை – சிறு தோட்டப் பிரிவு

2023 ஆம் ஆண்டிற்காக சிறு தோட்டப் பரிவில் 300 ஹெக்டயர் இறப்பர் மீள் செய்கை இலக்கிற்கு அமைய திணைக்களத்தினால் எட்டப்பட்டுள்ள பௌதீக முன்னேற்றங்களுக்கு உரிய தகவல்கள் கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிறு தோட்டப் பிரிவினால் இறப்பர் கன்று மானிய உதவித் திட்டத்தின் கிழ் மீள் செய்கை மேற்கொள்ளப்பட்டநிலப்பரப்பு அளவு -2023

| மாவட்டங்கள் | இலக்கு (ஹெக்) | கிடைக்கப்பெற்ற விண்ணப்படிவங்களின் எண்ணிக்கை | விண்ணப்பப்படிவங்களுக்கு உரியதான நிலப்பரப்பு அளவு (ஹெக்.) | வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்கு உரிய நிலப்பரப்பு அளவு (ஹெக்) | அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்ட அனுமதிப்பத்திரதாரர்களின் எண்ணிக்கை | மீள் செய்கை மேற்கொள்ளப்பட்ட அனுமதிப்பத்திரதாரர்களின் எண்ணிக்கை | மீள் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பராப்பு அளவு (ஹெக்) | மீள் செய்கைக்காக கன்று வழங்கப்பட்ட விவசாயிகளின் எணணிக்கை | மீள் செய்கைக்காக வழங்கப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி | 56 | 96 | 66.01 | 90 | 63.10 | 90 | 53 | 31.12 | 50 | 17,585 |
| கொழும்பு | 10 | 24 | 21.69 | 20 | 17.89 | 20 | 14 | 15.81 | 14 | 8,803 |
| கேகாலை | 112 | 425 | 263.19 | 379 | 233.35 | 379 | 286 | 164.21 | 271 | 80,731 |
| கம்பஹா | 13 | 38 | 28.65 | 28 | 22.80 | 28 | 19 | 18.47 | 17 | 7,915 |
| குருநாகலை | 9 | 39 | 36.46 | 37 | 35.23 | 37 | 28 | 26.87 | 28 | 12,489 |
| கண்டி | 5 | 34 | 17.34 | 29 | 13.39 | 29 | 16 | 7.99 | 12 | 3,255 |
| மாத்தளை | 4 | 3 | 7.68 | 3 | 7.68 | 3 | 2 | 4.80 | 2 | 2,580 |
| களுத்துரை | 48 | 76 | 61.32 | 68 | 59.26 | 68 | 43 | 31.33 | 43 | 16,788 |
| மொணராகலை | 14 | 15 | 6.54 | 12 | 5.82 | 12 | 8 | 4.21 | 8 | 2,101 |
| காலி | 11 | 5 | 6.65 | 5 | 6.65 | 5 | 2 | 4.05 | 2 | 2,170 |
| மாத்தரை | 18 | 18 | 30.00 | 18 | 30.00 | 18 | 14 | 15.73 | 14 | 8,513 |
| **மொத்தம்** | **300** | **773** | **545.53** | **689** | **495.17** | **689** | **485** | **324.59** | **461** | **162,930** |

அட்டவணை இலக்கம் II

2023 ஆம் ஆண்டில் சிறு தோட்டப் பிரிவில் இறப்பர் செய்கையாளர்கள், மீள் செய்கைக்காக 773 விண்ணப்படிவங்களை திணைக்களத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளதுடன், அதில் 689 விண்ணப்படிவங்களுக்காக திணைக்களத்தினால் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவ் அனுமதிப்பத்திரத்தின் கீழ் 485 அனுமதிப்பத்திரதாரர்களினால் 324.59 ஹெக்கடயர் நிலப்பரப்பில் இறப்பர் மீள் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் சிறு தோட்டப் பிரிவினால் இறப்பர் மீள் செய்கை மேற்கொள்ளும் இலக்கு 300 ஹெக்டயராக காணப்பட்ட போதிலும், அவ் ஆண்டில் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பின் அளவு 324.59 ஹெக்டயரை விட கூடுதலான அளவினைக் காண்பித்து இருந்தமை முன்னேற்றகரமான அடையாளமாகும்.

அத்துடன், செய்கையினை மேற்கொண்ட விவசாயிகள் 485 பேர்களில் 461 பேர்களுக்காக திணைக்களத்தினால் கன்று மானிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களுக்காக 162,930 கன்றுகள் திணைக்களதிற்குரிய கன்று நாற்று மேடைகள் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

## 2.1.2. இறப்பர் மீள் செய்கை – பெருந்தோட்டப் பிரிவு

பெருந்தோட்டக் கம்பனியினால் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இறப்பர் மீள் செய்கை தொடர்பான தகவல்கள் கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இறப்பர் மீள் செய்கை பெருந்தோட்டக் கம்னி – 2023**

| பெருந்தோட்டக் கம்பனியின் பெயர் | சமர்பிக்கப்பட்ட விண்ணப்படிவங்கிளின் எண்ணிக்கை | அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட காணி அளவு (ஹெக்) | செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு அளவு (ஹெக்) |
|---|---:|---:|---:|
| புஸ்ஸல்ல பொருந்தோட்டக் கம்பனி | 34 | 198.75 | 177.87 |
| அகவலவத்தை பொருந்தோட்டக் கம்பனி | 55 | 335.08 | 279.70 |
| கஹவத்தை பொருந்தோட்டக் கம்பனி | 2 | 9.86 | 9.86 |
| பலங்கொடை பொருந்தோட்டக் கம்பனி | 6 | 20.48 | 20.48 |
| லலான் பொருந்தோட்டக் கம்பனி | 25 | 153.73 | 131.50 |
| கேகாலை பொருந்தோட்டக் கம்பனி | 33 | 187.67 | 102.41 |
| கலனிவெலி பொருந்தோட்டக் கம்பனி | 8 | 41.15 | 36.10 |
| மல்வத்தைவெலி பொருந்தோட்டக் கம்பனி | 9 | 59.93 | 33.52 |
| அல்கடுவ பொருந்தோட்டக் கம்பனி | 1 | 10.00 | 4.00 |
| கொடகல பொருந்தோட்டக் கம்பனி | 9 | 60.07 | 40.07 |
| நமுனுகுல பொருந்தோட்டக் கம்பனி | 6 | 38.10 | 20.07 |
| அல்பிட்டிய பொருந்தோட்டக் கம்பனி | 1 | 7.01 | - |
| அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் | 1 | 10.01 | - |
| மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை | 2 | 8.50 | 5.50 |
| **மொத்தம்** | **192** | **1140.34** | **861.08** |

அட்டவணை இலக்கம் III

2023 ஆம் ஆண்டில் 14 பெருந்தோட்டக் கம்பனிகளுக்காக இறப்பர் மீள் செய்கைக்காக 1,140.34 ஹெக்டயருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதுடன் அதில் 861.08 ஹெக்டயரில் மீள் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2.2 . இறப்பர் புது செய்கை

### 2.2.1 இறப்பர் புது செய்கை – சிறு தோட்டப் பிரிவு

இறப்பர் செய்கை மேற்கொள்ளப்படாத நிலப்பரப்பில் புதிதாக இறப்பர் செய்கையினை ஆரம்பித்தல் இறப்பர் புது செய்கையாக கருதப்படுகின்றது. காணப்படும் இறப்பர் காணிகளை அதிகரித்து இறப்பர் உற்பத்தியினை மேம்படுத்துவதற்காக இறப்பர் புது செய்கை வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. சிறு தோட்ட உரிமையாளர்களுக்காக திணைக்களத்தினால் 2023 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட புது செய்கையின் இலக்கு 600 ஹெக்கடயராகும்.

**திணைக்கள இறப்பர் கன்று மானிய உதவியின் கீழ் இறப்பர் புது செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு அளவு – 2023 (சிறுதோட்டம்)**

| மாவட்டம் | இலக்கு (ஹெக்) | கிடைக்கப் பெற்ற விண்ணப் படிவங்களின் எண்ணிக்கை | விண்ணப் படிவங்களுக்கு உரிய நிலப்பரப்பு அளவு (ஹெக்.) | வழங்கப்பட்ட அனுமதிப பத்திரங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களுக்கு உரிய நிலப்பரப்பு | அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொண்ட அனுமதிப் பத்திரதாரர்களின் எண்ணிக்கை | புதிதாக செய்கை மேற்கொள்ளப்பட்ட அனுமதிப பத்திரதார்களின் எண்ணிக்கை | புதிதாக செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு அளவு (ஹெக்) | புதிய செய்கைக்காக கன்று வழங்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை | புதிய செய்கைக்காக கன்று வழங்கப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி | 14 | 43 | 24.45 | 39 | 21.47 | 39 | 17 | 6.43 | 18* | 3,945 |
| கொ்ழும்பு | 5 | 15 | 6.28 | 15 | 5.97 | 15 | 6 | 1.57 | 12* | 1,478 |
| கேகாலை | 33 | 146 | 50.42 | 126 | 42.65 | 126 | 94 | 33.36 | 89 | 17,604 |
| கம்பஹா | 5 | 26 | 13.97 | 23 | 10.60 | 23 | 12 | 6.91 | 11 | 2,409 |
| குருநாகலை | 3 | 39 | 17.54 | 29 | 14.31 | 29 | 21 | 8.14 | 21 | 4,204 |
| கண்டி | 2 | 16 | 8.12 | 15 | 7.93 | 15 | 12 | 4.93 | 12 | 2,593 |
| மாத்தளை | 3 | 1 | 0.74 | 1 | 0.74 | 1 | 1 | 0.73 | 1 | 392 |
| அநுராதபுரம் | 2 | 4 | 1.62 | 4 | 1.42 | 4 | 3 | 1.10 | 3 | 591 |
| களுத்துரை | 9 | 34 | 13.62 | 28 | 10.77 | 28 | 18 | 7.35 | 18 | 4,209 |
| மொணராகலை | 421 | 873 | 466.38 | 807 | 439.50 | 807 | 534 | 295.31 | 534 | 148,787 |
| பதுளை | 42 | 77 | 49.33 | 51 | 28.70 | 51 | 51 | 28.70 | 51 | 14,976 |
| அம்பாரை | 42 | 37 | 23.83 | 30 | 17.21 | 30 | 18 | 8.72 | 18 | 4,517 |
| காலி | 6 | 16 | 13.13 | 16 | 13.13 | 16 | 7 | 4.80 | 7 | 2,705 |
| மாத்தரை | 5 | 11 | 6.76 | 11 | 6.76 | 11 | 6 | 2.13 | 6 | 1,192 |
| ஹம்பாந்தேட் டை | 8 | 28 | 13.50 | 28 | 13.50 | 28 | 17 | 6.69 | 17 | 3,681 |
| **மொத்தம்** | **600** | **1,366** | **709.69** | **1,223** | **634.66** | **1,223** | **817** | **416.87** | **818** | **213,283** |

அட்டவணை IV

*கன்றுகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் 2023 ஆம் ஆண்டில் செய்கை மேற்கொள்ளப்படாத விவசாயிகள் காணப்படுகின்றனர். அவர்களின் அனுமதிப்பத்திரம் 2024 ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சிறு தோட்டப் பிரிவின் இறப்பர் புது செய்கை இலக்கினை எட்டும் முன்னேற்றம் 416.87 ஆகும். புதிய இறப்பர் செய்கை 416.87 ஹெக்டயர் தாபிப்பதற்கு 818 விவசாயிகளுக்காக திணைக்களத்தினால் ஒட்டு இறப்பர் கன்றுகள் 213,283 மானிய உதவியாக வழங்கப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட அட்டவணைக்கு அமைய 2023 ஆண்டிலும் மொணராகலை, கேகாலை, பதுளை ஆகிய மாவட்டங்களில் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் புது செய்கை திணைக்கள இலக்கினை பூர்த்தி செய்யும் போது கூடுதலான பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

2018 ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை இலங்கையில் இறப்பர் புதிய செய்கை மேற்கொள்ளப்பட்ட மொத்த நிலப்பரப்பு அளவு கீழ் குறிப்பிட்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இறப்பர் புது செய்கை நிலப்பரப்பு அளவு 2018 – 2023 (ஹெக்)**

| ஆண்டு | சிறு தோட்டம் (ஹெக்.) | பெருந்தோட்ட கம்பனி (ஹெக்.) | மொத்தம் (ஹெக்.) |
|---|---|---|---|
| 2018 | 981 | 48 | 1,029 |
| 2019 | 1,103 | - | 1,103 |
| 2020 | 726 | 25 | 751 |
| 2021 | 1,186 | 02 | 1,188 |
| 2022 | 489 | 15 | 504 |
| **2023** | **417** | **-** | **417** |

அட்டவணை V

## 2.3. இறப்பர் கன்று உற்பத்தி

### 2.3.1. அரசாங்கத்தின கன்று நாற்றுமேடை

இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் தொடர்புபட்டு தொடர்ந்தும் அவர்களின் ஆராய்ச்சியாளர்களினால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கண்டுபிடிப்புக்களுக்கு அமைய பண்புசார் தரம் கொண்ட இறப்பர் கன்று உற்பத்தி செய்வதற்காக இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தில் தாபிக்கப்பட்டுள்ள 08 இறப்பர் கன்று நாற்று மேடைகள் மூலம் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இறப்பர் கன்று உற்பத்தி மற்றும் கன்று விநியோகம் தொடர்பான தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**அரசாங்கத்தின் நாற்று மேடைகளில் கன்று உற்பத்தி மற்றும் கன்று விநியேகம் - 2023**

| **நாற்று மேடையின் பெயர்** | **கன்று விநியோக இலக்கு** | **உற்பத்தி செய்யப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை** | **வநியோகிக்கப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| கறபிஞ்ச | 40,000 | 48,220 | 44,096 |
| வெலிகடமுல்ல | 74,000 | 114,934 | 108,859 |
| மீரிகம் | 74,000 | 77,931 | 74,445 |
| ஆகல்ஓயா | 70,000 | 78,788 | 45,145 |
| குறுகொட | 50,000 | 73,816 | 40,911 |
| குபுக்கள | 222,000 | 180,264 | 193,945 |
| பதியதலாவ | 45,000 | 44,457 | 39,024 |
| மித்தெனிய | 35,000 | 55,723 | 51,230 |
| **மொத்தம்** | **610,000** | **674,133** | **597,655** |

அட்டவணை இலக்கம் VI

நாற்று மேடைககள் மூலம் 2023 ஆம் ஆண்டில் கன்று விநியோக இலக்கு 610,000 ஆகும். இவ் இலக்கினை எட்டுவதற்காக ஒட்டு இறப்பர் கன்றுகள் 674,133 உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன் அதில் 597,655 கன்றுகள் புதிய செய்கை மற்றும் மீள் செய்கைக்காக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் நாற்று மேடைகளில் கன்று விநியோகம் பிரிவுகளுக்கு அமைய கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| **நாற்று மேடையின் பெயர்** | **2023 ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த கன்றுகளின் எண்ணிக்கை** | | | | |
|---|---|---|---|---|---|
| | **சிறு தோட்டங்கள்** | **பெருந்தோட்டக் கம்பனி** | **ளுவுயசுசு செயற்திட்டம்** | **ஏனையவை** | **மொத்தம்** |
| கறபிஞ்ச | 36,243 | 1,800 | - | 6,053 | 44,096 |
| வெலிகடமுல்ல | 78,854 | 15,100 | 11,605 | 3,300 | 108,859 |
| மீரிகம | 60,640 | 12,305 | - | 1,500 | 74,445 |
| குறுகொட | 32,960 | 6,220 | - | 1,731 | 40,911 |
| ஏகல்ஓயா | 27,688 | 13,975 | - | 3,482 | 45,145 |
| இறம்புக்கனை | 154,917 | 8,112 | 27,380 | 3,536 | 193,945 |
| பதியதலாவ | 32,240 | - | 5,000 | 1,784 | 39,024 |
| மித்தெனிய | 31,517 | 1,550 | 17,348 | 815 | 51,230 |
| **மொத்தம்** | **455,059** | **59,062** | **61,333** | **22,201** | **597,655** |

. அட்டவணை இலக்கம் VII

### 2.3.2. தனியார் கன்று நாற்று மேடை

இலங்கையில் மீள் செய்கை மற்றும் புதிய செய்கைக்காக வருடாந்தம் இறப்பர் கன்று தேவைகளை முழுமையாக நிவர்த்தி செய்வதற்கு அரச நாற்று மேடைகளினால் முடிவதில்லை. கன்றுத் தேவைகளை நிவர்த்தி செய்யும் போது தனியார் நாற்று மேடை உரிமையாளர்களைப் போன்று பெருந்தோட்டக் கம்பனிகளினாலும் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பு வழங்கப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டில் மாவட்டங்களுக்கு அமைய தனியார் துறையின் இறப்பர் கன்று உற்பத்தி மற்றும் வநியோகம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**கன்று உற்பத்தி மற்றும் வநியோகம் - 2023 (தனியார் கன்று நாற்று மேடைகள்)**

| மாவட்டங்கள் | கன்று நாற்று மேடை எண்ணிக்கை | 2023 ஆண்டுக்குள் உற்பத்தி செய்யப்பட்ட இறப்பர் கன்றுகளின் எண்ணிக்கை | 2023 ஆண்டுக்குள் இறப்பர் கன்று விநியோகம் மேற்கொள்ளப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|
| இரத்தினபுரி | 7 | 261,780 | 75,770 |
| கொழும்பு | 5 | 104,425 | 36,790 |
| கேகாலை | 20 | 383,604 | 171,461 |
| கம்பஹா | 5 | 75,900 | 38,700 |
| கண்டி | 1 | 7,800 | 2,140 |
| குருநாகலை | 1 | 3,500 | 2,012 |
| களுத்துரை | 6 | 634,140 | 105,879 |
| மொணராகலை | 1 | 39,217 | 28,412 |
| காலி | 3 | 39,895 | 1,020 |
| **மொத்தம்** | **49** | **1,550,261** | **462,184** |

அட்டவணை இலக்கம் VIII

## 2.4. மழைக்கவசங்களை இடும் வேலைத்திட்டம்

சம்பிரதாய பூர்வமாக இறப்பர் செய்கை மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில் காணப்படும் பிரதான பிரச்சினையாகும். மழை காரணமாக பால் அறுவடை பெற்றுக் கொள்வதில் தடை ஏற்படல், மழைக் கவசங்களை இடுவதன் மூலம் ஆண்டு பூராகவும் இடைக்கிடையே ஈரழிப்பு வலையங்களில் மழை காலங்களில் வெற்றிகரமான முறையில் இறப்பர் பால் அறுவடையினை தொடர்ச்சியாக பெற்றுக் கொள்வதற்கு சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களைப் போன்று பெருந்தோட்டக் கம்பனிகளுக்கும் வாய்ப்பு கிடைக்கின்றது. மழைக் கவசங்களை இடுவதற்காக திணைக்களத்தின் வழிகாட்டலின் கீழ் சிறு இறப்பர் தோட்டப் பிரிவு மற்றும் பெருந்தோட்டக் கம்பனி பிரிவுகளில் 2023 ஆம் ஆண்டில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**மழைக்கவசங்களை இடல் - 2023 (சிறு தோட்டப் பிரிவு)**

| மாவட்டங்கள் | மழைக் கவசங்கள் இடப்பட்ட நிலப்பரப்பு அளவு (ஹெக்) | மழைக் கவசங்கள் இடப்பட்ட மரங்களின் எண்ணிக்கை | மழைக் கவசங்கள் இடப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| இரத்தினபுரி | 31.11 | 12,981 | 23 |
| கொழும்பு | 7.87 | 3,500 | 9 |
| கேகாலை | 103.54 | 49,453 | 49 |
| கம்பஹ | 7.40 | 4,171 | 5 |
| குருநாகலை | 43.76 | 15,520 | 9 |
| களுத்துரை | 9.16 | 3,235 | 5 |
| காலி | 0.40 | 175 | 1 |
| மாத்தரை | 13.64 | 5,582 | 5 |
| **மொத்தம்** | **216.88** | **94,617** | **106** |

அட்டவணை இலக்கம் IX

சிறு தோட்டப் பிரிவுகளில மழைக் கவசங்களை இடும் நிலப்பரப்பு அளவு 216.88 ஹெக்டயர் என்பதுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது அது 600 ஹெக்டயர் அளவு குறைவாகும். முன்னைய ஆண்டுகளில் மழைக் கவசங்களை இடுவதற்காக அமுல்படுத்தப்பட்ட மானிய உதவித் திட்டம் 2023 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்படாமை இதற்கு நேரடியாக தாக்கம் செலுத்தியுள்ளது.

பெருந்தோட்டக் கம்பனிகளினால் 2023 ஆம் ஆண்டில் இறப்பர் செய்கைக்காக மழைக் கவசங்களை இடுவது தொடர்பான தகவல்கள் கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மழைக் கவசங்களை இடல் - 2023 (பெருந்தோட்டக் கம்பனி)**

| பெருந்தோட்டக் கம்பனியின் பெயர் | மழைக் கவசங்கள் இடப்பட்ட நிலப்பரப்பு அளவு (ஹெக்) | மழைக் கவசங்கள் இடப்பட்ட மரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| புஸ்ஸல்லாவ பெருந்தோட்டக் கம்பனி | 1,886.32 | 656,550 |
| பலங்கொடை பெருந்தோட்டக் கம்பனி | 285.60 | 82,329 |
| ஹபுகஸ்தன்ன பெருந்தோட்டக் கம்பனி | 64.00 | 26,404 |
| அகவத்தை பெருந்தோட்டக் கம்பனி | 1,542.42 | 383,244 |
| குறுவிட இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம் | 105.58 | 34,911 |
| லலான் பெருந்தோட்டக் கம்பனி | 2,627.96 | 844,811 |
| கேகாலை பெருந்தோட்டக் கம்பனி | 1,334.80 | 396,876 |
| ஹொரணை பெருந்தோட்டக் கம்பனி | 240.96 | 88,072 |
| அல்பிட்டிய பெருந்தோட்டக் கம்பனி | 375.85 | 130,780 |
| நமுனுகுல பெருந்தோட்டக் கம்பனி | 134.26 | 39,229 |
| **மொத்தம்** | **8,597.75** | **2,683,206** |

அட்டவணை இலக்கம் X

2023 ஆண்டில் பெருந்தோட்டக் கம்பனியினால் மழைக் கவசங்கள் இடப்பட்ட நிலப்பரப்பு அளவு 8,597.75 ஹெக்டயராகும்.

## 2.5. இடைக்காலப் பயிர்ச் செய்கை

இறப்பர் செய்கையாளர்களுக்கு மேலதிக வருமானத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக இடைக்காலப் பயிற்செய்கை முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு அமைய, அண்ணாசி, வாழை, கொடி தோடை, பப்பாசி, கொகோவா, மிளகாய், இஞ்சி, பாக்கு, கறுவா, உப்பு, பயறு, கவுபி, உலுந்து, எள்ளு, குரக்கன், ஏலைக்காய், சாதிக்க, மிளகு, மரக்கறி வகைகள், சோளகம், போன்றன இடைக்கால பயிராக செய்கை மேற்கொள்ள முடியும். இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தின் பரிந்துரைக்கு அமைய வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட இடைக்காலப் பயிற்ச் செய்கை மூலம் செய்கையாளர்களின் பொருளாதாரம் பலமடைந்துள்ளது. 2023 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் இடைக்காலப் பயிற்செய்கைக்காக மானிய உதவி வேவலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்படாத போதிலும் திணைக்களத்தின் பரவலாக்கள் சேவை மூலம் 164 விவசாயிகளுக்கு 100.21 ஹெக்டயர் நிலப்பரப்பில் இடைக்காலப் பயிற்செய்கை மேற்கொள்வதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

**2023 ஆண்டில் இடைக்காலப் பயிற்செய்கை**

| மாவட்டம் | செய்கை மேற்கொள்ளப்பட்ட பயிற்ச் செய்கை வகை | செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு அளவு (ஹெக்.) | செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **இரத்தினபுரி** | அண்ணாசி | 2.04 | 4 |
| **கொழும்பு** | அண்ணாசி | 1.43 | 5 |
| | | **3.47** | **9** |
| **கேகாலை** | அண்ணாசி | 26.64 | 44 |
| | வாழை | 11.48 | 14 |
| | மரக்கறி | 1.82 | 4 |
| | ஏனைய பயிர் | 3.62 | 5 |
| **கம்பஹ** | அண்ணாசி | 13.38 | 17 |
| | ஏனைய பயிர் | 1.21 | 1 |
| **குருநாகலை** | வாழை | 3.88 | 6 |
| | ஏனைய பயிர் | 0.80 | 1 |
| **கண்டி** | வாழை | 4.70 | 7 |
| **அநுராதபுரம்** | மரக்கறி | 0.61 | 3 |
| | தாணியம் | 1.21 | 1 |
| | | **69.35** | **103** |
| **களுத்துரை** | அண்ணாசி | 4.43 | 7 |
| | வாழை | 0.57 | 2 |
| | மரக்கறி | 1.59 | 2 |
| | கொடி தோடை | 1.01 | 1 |

| | | | |
|---|---|---|---|
| | | **7.60** | **12** |
| **மொணராகலை** | போகப் பயிர் | 3.66 | 7 |
| **பதுளை** | போகப் பயிர் | 1.96 | 5 |
| **அம்பாரை** | போகப் பயிர் | 3.14 | 6 |
| | | **8.76** | **18** |
| **காலி** | போகப் பயிர் | 2.53 | 3 |
| **மாத்தரை** | அண்ணாசி | 0.45 | 2 |
| | வாழை | 0.51 | 2 |
| **ஹம்பாந்தோட்டை** | வாழை | 2.39 | 6 |
| | போகப் பயிர் | 4.74 | 8 |
| | அண்ணாசி | 0.41 | 1 |
| | | **11.03** | **22** |
| **முழு மொத்தம்** | | **100.21** | **164** |

அட்டவணை இலக்கம் XI

## 2.6. இறப்பர் செய்கை சார்ந்த பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்ததுல்.

### 2.6.1. பால் வெட்டும் திறன் பயிற்சி – பொது

சரியாக, பயன்மிக்கதாக நீண்டகாலமாக பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பினை வழங்கி உரிய தொழில்நுட்பத்திற்கு அமைய பால் வெட்டும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக திணைக்களத்தினால் பால் வெட்டும் திறன் பொது பயிற்சி வேலைத்திட்டம் வருடாந்தம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்ல் 66 பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்தி 824 பேர்களுக்காக பயிற்றுவிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**பால் வெட்டும் திறன் பயிற்சி வேலைத்திட்டம் – (பொது) - 2023**

| பிரதேச அலுவலகங்கள் | நடாத்தப்பட்ட வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | வேலைத்திட்டத்தில் பங்கேற்றோரின் எண்ணிக்கை | செலவிடப்பட்ட நிதி (ரூபா) |
|---|---|---|---|
| இரத்தினபுரி | 11 | 145 | 95,548.00 |
| கேகாலை | 7 | 140 | 116,403.00 |
| களுத்துரை | 18 | 237 | 136,959.00 |
| மொணராகலை | 21 | 210 | 252,864.00 |
| காலி | 9 | 92 | 92,000.00 |
| **மொத்தம்** | **66** | **824** | **693,774.00** |

அட்டவணை இலக்கம் XII

## 2.6.2. ஒட்டுனர் பயிற்சி வேலைத்திட்டம்

ஒட்டுனர் பணிகளில் ஈடுபட்டுள்ளதைப் போன்று கன்று ஒட்டுனர் பணியில் ஈடுபடுவதற்காக விருப்பம் காண்பிக்கும் பயிலுநாகள் இப பயிற்சி வேலைத்திட்டத்தின் மூலம் பயிற்றுவிக்கப்படும்.

**ஒட்டுனர்களுக்கு பயிற்சியளித்தல் - 2023**

| பிரதேச அலுவலகங்கள் | நடாத்தப்பட்ட வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | வேலைத்திட்டங்களில் பங்கேற்றோர் எண்ணிக்கை | செலவிடப்பட்ட நிதி (ரூபா. ) |
|---|---|---|---|
| இரத்தினபுரி | 1 | 55 | 132,080.00 |
| களுத்துரை | 2 | 36 | 64,050.00 |
| மொணராகலை | 2 | 60 | 83,000.00 |
| காலி | 1 | 10 | 17,868.00 |
| **மொத்தம்** | **6** | **161** | **296,998.00** |

அட்டவணை இலக்கம் XIII

## 2.6.3. கோகாலை பிரதேச அலுவலகத்தின் மூலம் நடாத்தப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்கள்.

| பயிற்சி வேலைத்திட்டங்கள் | நடாத்தப்பட்ட வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | பயிற்சி பெற்றோரின் எண்ணிக்கை | செலவிடப்பட்ட நிதி (ரூபா. ) |
|---|---|---|---|
| நடுத்தரளவு செய்கையாளர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டம் | 1 | 80 | 151,000.00 |
| RRISL 2001 மற்றும் RRISL 203 குலோன பயிற்செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாயிகளை அறிவுறுத்தும் வேலைத்திட்டம். | 2 | 120 | 17,000.00 |

அட்டவணை இலக்கம் XIV

இறப்பர் செய்கைக்காக பசளையிடும் பயிற்சி வேலைத்திட்டம், இறப்பர் செய்கைக்காக பசளையிடும் பயிற்சி வேலைத்திட்டம், இறப்பர் சார்ந்த உற்பத்திக் கைத்தொழில் தொடர்பான பயிற்சி, இறப்பர் சீட் உற்பத்திப் பயிற்சி, இறப்பர் செய்கை தொடர்பாக அறிவுறுத்தும் பயிற்சிகள் போன்ற பயிற்சி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

## 2.7. இயற்கை இறப்பர் கைத்தொழில்சார்ந்த தகவல்கள் - 2023

### 2.7.1. இறப்பர் பயிர்செய்கை நிலப்பரப்பு அளவு

2010 ஆண்டில் முழு நாட்டையும் தழுவக் கூடிய வகையில் மேற்கொள்ளப்பட்ட இறப்பர் காணி புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டு வருடாந்தம் மேற்கொள்ளப்படும் புதிய பயிர்செயிகை அளவு மற்றும் செய்கையில் இருந்து நீக்கப்படும் காணியின் அளவிளைக் கருத்திற் கொண்டு 2023 ஆம் ஆண்டில் இலங்கையில் மதிப்பீடு செய்யப்பட்ட இறப்பர் காணி அளவு கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**இறப்பர் காணி அளவு (2023)**

| ஆண்டு | மதிப்பீடு செய்யப்பட்ட நிலப்பரப்பு அளவு (ஹெக்) | | |
|---|---|---|---|
| | சிறு தோட்டப் பிரிவு | பிரதேச பெருந்தோட்டக் கம்பனி / அரச தோட்டம் | மொத்தம் |
| 2023 | 67,039 | 31,354 | 98,393 |

அட்டவணை இலக்கம் XV

### 2.7.2. இலங்கையில் இயற்கை இறப்பர் உற்பத்தி - 2023

2023 ஆம் ஆண்டில் இறப்பர் உற்பத்தி 64,444 மெற்றிக் தொன் ஆகும். இதன் பெறுமதி 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 6,423 மெட்ரிக் தொன் அதிகரிப்பினைக் காண்பிக்கின்றது. 2023 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இறப்பர் விலை துரிதமாக வீழ்ச்சியடைந்தமை, ஆண்டுபூராகவும் விரிவடைந்து காணப்பட்ட கூடுதலான மழை வீழ்ச்சி, இலையுதிர் நோய் விவசாய நிலப்பரப்பில் கூடுதலாக காணப்பட்டமை உற்பத்தி வீழ்ச்சியடைவதற்கு காரணமாக அமைந்தது.

**உலக இறப்பர் உற்பத்தி – 2023 (ஆயிரம் மெட்ரிக் தொன்)**

| நாடுகள் | இறப்பர் உற்பத்தி 2022 | இறப்பர் உற்பத்தி 2023 |
|---|---|---|
| தாய்லாந்து | 4,786 | 4,707 |
| இந்தோநேசியா | 2,717 | 2,651 |
| வியட்நாம் | 1,340 | 1,293 |
| சீனா | 862 | 835 |
| இந்தியா | 843 | 849 |
| மலேசியா | 377 | 340 |
| காம்போஜ் | 382 | 392 |
| மியன்மார் | 299 | 300 |
| பிலிபைன் | 208 | 191 |
| இலங்கை | 71 | 64 |
| பங்களதேஷ் | 23 | 23 |
| பபுவா நிவ்கினியா | 6 | 6 |
| ஏனைய நாடுகள் | 2,332 | 2,639 |
| **உலக உற்பத்தி** | **14,245** | **14,290** |

அட்டவணை இலக்கம் XVI

*மூலம் - இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யும் நாடுகள் ஒன்றியத்தின் (ANRPC) புள்ளிவிபரங்கள் ஊடாக*

மேற்கூறப்பட்ட அட்டவணைக்கு அமைய 2022 ஆம் ஆண்டிற்கு இணைவாக 2023 ஆம் ஆண்டில் உலக இறப்பத் உற்பத்தி 45 ஆயிரம் மெட்ரிக் தொன் இனால் அதிகரித்துள்ளது. 2022 ஆம் ஆணடைப் போன்று 2023 ஆம் ஆண்டிலும் கூடுதலாக இறப்பர் உறபத்தி ஆமேற்கொள்ளப்பட்டு இருப்பது தென் கிழக்கு ஆசிய நாடான தாய்லாந்தில் ஆகும்.

## 2.7.3. இறப்பர் உற்பத்திச் செலவினம்

**இறப்பர் உற்பத்திச் செலவினம் 2021 – 2023 (1 கிலோகிராம் / ரூபா)**

| ஆண்டு | பொருந்தோட்டக் கம்பனிகள் | சிறு தோட்டப் பிரிவு |
|---|---|---|
| **2021** | 364.91 | 221.00 |
| **2022** | 369.43 | 288.00 |
| **2023** | 486.00* | 302.00* |

அட்டவணை இலக்கம் XVII

*பின்னர் தகவல்கள் சமாகலப்படுத்தக் கூடும்.

## 2.7.4. இயற்கை இறப்பர் ஏற்றுமதி

2022 ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2023 ஆம் ஆண்டில் இலங்கையில் இறப்பர் ஏற்றுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அதாவது 2022 ஆம் ஆண்டில் இயற்கை இறப்பர் 15,138 மெட்ரிக் தொன் காணப்பட்ட ஏற்றுமதி அளவு 2023 ஆம் ஆண்டில் 12,673 மெட்ரிக் தொன் வரை வீழ்ச்சியடைந்துள்ளதைக் காண முடிகின்றது.

### 2.7.5. இலங்கையில் மொத்த இறப்பர் ஏற்றுமதி

இலங்கையில் இறப்பர் ஏற்றுமதி தொடர்பான புள்ளிவிபரங்களுக்கு அமைய 2023 ஆம் ஆண்டில் மொத்த இறப்பர் ஏற்றுமதி வருமானமாக ரூபா 304,770 மில்லியன் உள்நாட்டுப் பொருளாதாரத்துடன் இணைப்பதற்கு இறப்பர் பிரிவிற்கு முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**மொத்த இறப்பர் ஏற்றுமதி அளவு மற்றும் ஏற்றுமதி வருமானம் - 2023**

| வகைகள் | ஏற்மதி செய்யப்பட்ட அளவு | ஏற்றுமதி வருமானம் ரூபா.மி.) |
|---|---|---|
| இயற்கை இறப்பர் (மெ.தொ). | 12,673 | 9,288 |
| செயற்கை இறப்பர் (மெ.தொ). | 57 | 6 |
| பகுதியளவு முடிவு இறப்பர் (மெ.தொ). | 9,149 | 935 |
| முடிவுப் பொருள் (மெ.தொ). | 50,516 | 101,120 |
| முடிவுப் பொருள் (அலகு) | 23,505,133 | 193,421 |
| மொத்த இறப்பர் ஏற்றுமதி அளவு (மெ.தொ). | 72,395 | 111,349 |
| மொத்த இறப்பர் ஏற்றுமதி அளவு (அலகு) | 23,505,133 | 193,421 |
| **மொத்தம்** | | **304,770** |

அட்டவணை இலக்கம் XVIII

**மொத்த இறப்பர் ஏற்றுமதி வருமானம் -2023 ( நாடுகளுக்கு அமைய)**

| நாடுகள் | ஏற்றுமதி வருமானம் (ரூபா.மி.) | விகிதாசாரம் (%) |
|---|---|---|
| அமெரிக்க ஐக்கிய இராச்சியம் | 102,244.9 | 33.5 |
| ஜேர்மன் | 27,749.0 | 9.1 |
| பெல்ஜியம் | 15,538.8 | 5.1 |
| இதாலி | 14,216.1 | 4.6 |
| பிரசீல் | 11,556.0 | 3.8 |
| கனடா | 10,569.2 | 3.5 |
| பிரான்ஸ் | 10,592.5 | 3.5 |
| ஐக்கிய இரச்சியம் | 9,994.2 | 3.3 |
| இந்தியா | 9,220.2 | 3.0 |
| அவுஸ்திரேலியா | 9,137.6 | 3.0 |
| ஏனைய நாடுகள் | 83,951.8 | 27.6 |
| **மொத்த இறப்பர் ஏற்றுமதி வருமானம்** | **304,770.3** | **100.00** |

அட்டவணை இலக்கம் XIX

**இலங்கையில் இயற்கை இறப்பர் கொள்வனவு செய்யப்பட்ட பிரதான நாடுகள் - 2023**

| நாடுகள் | விற்பனை செய்யப்பட்ட அளவு (மெ.தொ.) | விகிதாசாரம் % |
|---|---|---|
| பாகிஸ்தான் | 4,526 | 35.71 |
| ஜப்பான் | 1,040 | 8.21 |
| சீனா | 972 | 7.67 |
| இந்தியா | 907 | 7.16 |
| ஜேர்மன் | 696 | 5.49 |
| மலேசியா | 664 | 5.24 |
| தென் ஆபிரிக்கா | 518 | 4.09 |
| வியட்நாம் | 469 | 3.70 |
| அமெரிக்க ஐக்கிய இராச்சியம் | 436 | 3.44 |
| இதாலி | 421 | 3.32 |
| ஏனைய நாடுகள் | 2,024 | 15.97 |
| **மொத்தம்** | **12,673** | **100** |

அட்டவணை இலக்கம் XX

## 2.7.6. இயற்கை இறப்பர் இறக்குமதி

2023 ஆம் ஆண்டில் இயற்கை இறப்பர் மெட்ரிக் தொன் 37,295 இறக்குமதி செய்யப்பட்டுள்ளதுடன் அதன் பெறுமதி 2022 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட அளவான 64,459 மெ.தொன் அளவுடன் ஒப்பீடு செய்யும் போது அது 42% குறைவினைக் காண்பிக்கின்றது.

**நாடுகளுக்கு அமைய இயற்கை இறப்பர் இறக்குமதி செய்யப்பட்ட அளவுகள் - 2023**

| நாடுகள் | இறக்குமதி செய்யப்பட்ட அளவு (மெ.தொன்.) | விகிதாசாரம் (%) |
|---|---|---|
| தாய்லாந்து | 18,233 | 48.89 |
| வியட்நாம் | 9,232 | 24.75 |
| இந்தேநேசியா | 4,924 | 13.2 |
| மலேசியா | 1,733 | 4.65 |
| ஐவரி கோஸ்ட் | 1,331 | 3.57 |
| இந்தியா | 1,070 | 2.87 |
| பொல்ஜியம் | 262 | 0.70 |
| பங்களதேஷ் | 218 | 0.58 |
| ஐக்கிய இராச்சியம் | 101 | 0.27 |
| தென் ஆபிரிக்கா | 70 | 0.19 |
| ஏனைய நாடுக்ள | 121 | 0.32 |
| **மொத்தம்** | **37,295** | **100** |

அட்டவணை இலக்கம் XXI

## 2.7.7. மொத்த இறப்பர் இறக்குமதி மொத்த இறப்பர் இறக்குமதி அளவு மற்றும் இறக்குமதி செலவினம் - 2023

| வகைகள் | இறக்குமதி செய்யப்பட்ட அளவு | இறக்குமதி செலவினம் (ரூபா.மி.) |
|---|---|---|
| இயற்கை இறப்பர் (மெ.தொ.) | 37,295 | 17,550 |
| செயற்கை இறப்பர் (மெ.தொ.) | 52,410 | 29,407 |
| பகுதியளவு முடிவு இறப்பர் (மெ.தொ.) | 29,123 | 10,504 |
| முடிவு இறப்பர் (மெ.தொ.) | 7,710 | 14,757 |
| முடிவு இறப்பர் (Unit) | 2,295,087 | 14,369 |
| மொத்த இறப்பர் இறக்குமதி அளவு (மெ.தொ.) | 126,538 | 72,218 |
| மொத்த இறப்பர் இறக்குமதி அளவு (அலகு) | 2,295,087 | 14,369 |
| **மொத்தம்** | | **86,587** |

அட்டவணை இலக்கம் XXII

2022 ஆம் ஆண்டிற்கு இணைவாக 2023 ஆம் ஆண்டில் இறக்குமதி அளவினைப் போன்று 2023 ஆம் ஆண்டில் இறக்குமதி செலவினத்தில் குறிப்பிடத்தக்களவு குறைவு காண்பிக்கப்பட்டுள்ளது. அதாவது, 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 125,863.22 மில்லியன் இறக்குமதி செலவினம் 2023 ஆம் ஆண்டில் ரூபா 86,587 மில்லியன் வரை குறைவடைந்துள்ளது.

**மொத்த இறப்பர் இறக்குமதி செலவினம் (நாடுகளுக்கு அமைய) - 2023**

| நாடுகள் | இறக்குமதி செலவினம் (ரூபா.மி.) | விகிதாசாரம் (%) |
|---|---|---|
| தாய்லாந்து | 12,133 | 14.0 |
| இந்தியா | 11,856 | 13.7 |
| சீனா | 11,554 | 13.3 |
| மலேசியான | 7,352 | 8.5 |
| தென் கொரியா | 7,038 | 8.1 |
| ஜப்பான் | 6,635 | 7.7 |
| வியட்நாம் | 4,792 | 5.5 |
| தாய்வான் | 4,432 | 5.1 |
| இந்தோநேசியா | 4,028 | 4.7 |
| பிரேசில் | 3,364 | 3.9 |
| ஏனைய நாடுகள் | 13,403 | 15.5 |
| **மொத்தம்** | **86,587** | **100** |

அட்டவணை இலக்கம் XXIII

## 2.7.8. இறப்பர் விலை

### 2.7.8.1. இறப்பர் வர்த்தகர்களினால் விவசாயிகளிடமிருந்து இறப்பர் பெற்றுக் கொண்ட விலைகளில் மாதாந்த சராசரி

இறப்பர் வர்த்தகர்களினால் விவசாயிகளிடமிருந்து இறப்பர் பெற்றுக் கொண்ட விலைகளில் மாதாந்த சராசரி

**(Farm Gate Price) 2023**

| மாதாங்கள் | சீட் இறப்பர் (ஆர்.எஸ்.எஸ்.) | | | | | லேடெக்ஸ் (இறப்பர் பால்) | ஒட்டுப்பால் |
|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | | |
| ஜனவரி | 455.73 | 445.35 | 437.15 | 433.21 | 432.53 | 390.42 | 199.92 |
| பெப்ரவரி | 421.24 | 417.54 | 402.51 | 396.45 | 395.61 | 350.13 | 195.68 |
| மார்ச் | 397.98 | 392.91 | 386.62 | 379.18 | 379.46 | 423.50 | 190.17 |
| ஏப்ரல் | 402.15 | 400.70 | 394.19 | 388.48 | 388.19 | 432.27 | 195.61 |
| மே | 439.61 | 436.55 | 427.50 | 422.29 | 421.41 | 447.15 | 222.55 |
| ஜூன் | 447.74 | 445.74 | 438.76 | 431.24 | 429.82 | 445.66 | 226.90 |
| ஜூலை | 474.21 | 472.09 | 468.15 | 458.41 | 456.49 | 453.87 | 246.73 |
| ஆகஸ்ட் | 500.51 | 493.43 | 490.02 | 480.01 | 478.26 | 470.07 | 247.24 |
| செப்டம்பர் | 501.09 | 493.43 | 492.24 | 484.75 | 481.65 | 464.61 | 243.06 |
| ஒக்டோபர் | 520.93 | 516.78 | 514.13 | 504.12 | 500.57 | 475.81 | 252.20 |
| நவம்பர் | 579.42 | 571.24 | 579.62 | 570.78 | 569.81 | 497.41 | 275.39 |
| டிசம்பர் | 652.85 | 649.30 | 637.45 | 628.00 | 621.80 | 516.08 | 305.24 |
| சராசரிப் பெறுமதி | **482.79** | **477.92** | **472.36** | **464.74** | **462.97** | **447.25** | **233.39** |

அட்டவணை இலக்கம் XXIV

## கொழும்பு ஏல விற்பனையில் இறப்பர் வகைகளின் சராசரி விலை மதாந்த அடிப்படையில் - 2023

| மாதங்கள் | இறப்பர் சீட் (ஆர்.எஸ்.எஸ்) | | | | | லோடெக்ஸ் கிரேப் | | | | | ஸ்கிராப் கிரேப் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 1X | 1 | 2 | 3 | 4 | 1XBR | 2XBR | 3XBR | No.4 | F.B. | SKIM |
| ஜனவரி | 472.67 | 483.00 | 476.50 | 456.50 | 450.00 | 600.00 | 572.00 | 466.20 | 438.60 | 422.00 | 398.00 | 389.00 | 392.25 | 395.33 | 358.00 | 370.40 |
| பெப்ரவரி | 505.00 | 485.00 | ඉ. නැත | 452.00 | 440.00 | 616.67 | 610.00 | 558.75 | 490.00 | 485.50 | 451.67 | 428.00 | 432.00 | 419.33 | 415.00 | 424.33 |
| மார்ச் | 480.00 | ச.வில்லை | ச.வில்லை | ச.வில்லை | ச.வில்லை | ச.வில்லை | ச.வில்லை | 400.00 | 378.00 | 373.67 | 362.67 | ச.வில்லை | 365.00 | 355.00 | ச.வில்லை | 374.67 |
| ஏப்ரல் | 464.00 | 446.75 | 444.00 | 426.50 | 417.50 | 572.50 | 570.00 | 517.50 | 481.25 | 463.75 | 440.00 | 417.70 | 440.00 | 429.33 | ச.வில்லை | 440.25 |
| மே | 485.00 | ச.வில்லை | ச.வில்லை | ச.வில்லை | ச.வில்லை | 640.25 | 639.75 | 613.75 | 586.25 | 515.33 | 485.00 | 475.00 | 471.50 | 456.50 | ச.வில்லை | 456.67 |
| ஜுன் | 536.25 | ச.வில்லை | ச.வில்லை | ச.வில்லை | ச.வில்லை | 668.25 | 659.50 | 551.25 | 491.67 | 456.25 | 435.75 | ச.வில்லை | 438.67 | 435.00 | 400.00 | 434.31 |
| ஜுலை | 600.00 | ச.வில்லை | 550.00 | ச.வில்லை | ச.வில்லை | 732.50 | 731.67 | 602.50 | 513.75 | 474.25 | 456.00 | 454.33 | 444.00 | 434.83 | 427.50 | 438.00 |
| ஆகஸ்ட் | 518.33 | 510.00 | 500.00 | 480.00 | 470.00 | 778.75 | 754.00 | 542.40 | 456.40 | 441.40 | 419.50 | 402.50 | 400.38 | 391.00 | 382.67 | 400.87 |
| செப். | 566.00 | ச.வில்லை | 545.00 | ச.வில்லை | ச.வில்லை | 806.00 | 785.00 | 570.00 | 501.75 | 470.25 | 443.00 | 410.00 | 413.25 | 408.75 | ச.வில்லை | 405.50 |
| ஒக். | 610.00 | ச.வில்லை | ச.வில்லை | ச.வில்லை | ச.வில்லை | 845.00 | 811.67 | 539.00 | 512.60 | 498.60 | 479.75 | 465.67 | 456.10 | 440.75 | ச.வில்லை | 439.00 |
| நவம்பர். | 682.33 | 650.00 | ச.வில்லை | ச.வில்லை | ச.வில்லை | 851.25 | 835.00 | 553.75 | 540.00 | 536.50 | 518.25 | 512.50 | 496.33 | 472.50 | 485.00 | 474.50 |
| டிசம்பர் | 793.33 | 772.50 | ச.வில்லை | 752.00 | ச.வில்லை | 898.00 | 865.00 | 746.25 | 653.75 | 645.00 | 610.00 | 565.00 | 593.33 | 586.00 | ச.வில்லை | 589.00 |
| சராசரி | **559.41** | **557.88** | **503.10** | **513.40** | **444.38** | **728.11** | **712.14** | **555.11** | **503.67** | **481.88** | **458.30** | **451.97** | **445.23** | **435.36** | **406.86** | **437.29** |

அட்டவணை இலக்கம் XXV

## 2.7.9. சர்வதேச இறப்பர் விலை (2018-2023)

| ஆண்டு | இலங்கை ரூபா | | | |
|---|---|---|---|---|
| | கொழும்பு ஏல விற்பனை விலை (ரூபா.) (RSS 3) | பாங்கொக் ஏல விற்பனை விலை (ரூபா) (RSS 3) | கொட்டாயம் ஏல விற்பனை விலை (ரூபா.) (RSS 4) | சைகொம் ஏல விற்பனை விலை (ரூபா) (RSS 3) |
| **2018** | 263.11 | 257.00 | 301.80 | 256.01 |
| **2019** | 272.43 | 296.90 | 343.08 | 297.05 |
| **2020** | 318.86 | 327.01 | 339.82 | 322.17 |
| **2021** | 435.52 | 389.13 | 443.64 | 416.54 |
| **2022** | 556.56 | 619.89 | 676.16 | 585.65 |
| **2023** | **503.10** | **564.71** | **605.20** | **575.34** |

அட்டவணை இலக்கம் XXVI

## 2.8. அனுமதிப்பத்திரம் பெற்ற இறப்பர் வர்த்தகர்கள் தொடர்பான தகவல்கள்

2023 ஆண்டில் இறப்பர் கொள்வனவிற்காக இறப்பர் வர்த்தகர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் தகவல்கள் மாவட்டங்களுக்கு அமைய கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

| மாவட்டங்கள் | புதுப்பிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட புதிய அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | மொத்தம் (2023) ஆண்டுக்குள் வழங்கப்பட்ட மொத்த அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| இரத்தினபுரி | 118 | 8 | 126 |
| கொழும்பு | 39 | 2 | 41 |
| கேகாலை | 170 | 7 | 177 |
| கம்பஹா | 25 | 5 | 30 |
| குருநாகலை | 8 | - | 8 |
| கண்டி | 11 | - | 11 |
| மாத்தளை | 1 | - | 1 |
| களுத்துரை | 128 | 6 | 134 |
| மொணராகலை | 34 | 27 | 61 |
| பதுளை | 1 | 2 | 3 |
| அம்பாரை | 1 | 0 | 1 |
| காலி | 26 | 0 | 26 |
| மாத்தரை | 24 | 5 | 29 |
| ஹம்பாந்தோட்டை | 1 | 0 | 1 |
| **மொத்தம்** | **587** | **62** | **649** |

அட்டவணை இலக்கம் XXVII

## 2.9. கூட்டிணைந்த நிதியம்

| செலவின விடயங்க்ள | | ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூபா) | 2023.12.31 ஆம் திகதியன்று **தேறிய செலவினம்** (ரூபா) |
|---|---|---|---|
| **<u>மீண்டெழும் செலவினம்</u>** | | | |
| சம்பளம் மற்றும் கொடுப்பனவு | 1001 | 209,698,000.00 | 202,215,936.34 |
| மேலதிக மற்றும் விடுமுறை தின சம்பளம் | 1002 | 7,000,000.00 | 3,258,822.66 |
| ஏனைய கொடுப்பனவு | 1003 | 93,000,000.00 | 88,733,877.70 |
| பயணச் செலவினம் - உள்நாடு | 1101 | 15,000,000.00 | 12,705,413.88 |
| பிரயாணச் செலவினம் - வெளிநாடு | 1102 | - | - |
| காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைகள் | 1201 | 7,000,000.00 | 6,246,587.05 |
| எரிபொருள் | 1202 | 17,000,000.00 | 13,546,359.09 |
| உணவுபானங்கள் மற்றும் சீருடை | 1203 | 500,000.00 | 486,995.25 |
| ஏனைய விநியோகம் | 1205 | 800,000.00 | 655,869.84 |
| வாகன பராமரிப்பு | 1301 | 10,000,000.00 | 8,850,398.92 |
| இயந்திரம் மற்றும் இயந்திரோபகரண பராமரிப்பு | 1302 | 1,200,000.00 | 1,115,264.02 |
| கட்டம் மற்றும் நிர்மாண பராமரிப்பு | 1303 | 850,000.00 | 762,610.00 |
| போக்குவரத்து | 1401 | 3,500,000.00 | 2,746,198.15 |
| தபால் மற்றும் தொடர்புசாதனம் | 1402 | 6,000,000.00 | 5,518,387.53 |
| மின்சாரம் மற்றும் நீர் | 1403 | 3,150,000.00 | 2,797,764.30 |
| குத்தகைக்கு கூலி மற்றும் உள்ளூராட்சி மன்ற வரி | 1404 | 48,000,000.00 | 46,224,637.88 |
| ஏனையவை (சுத்தப்படுத்தல் / பாதுகாப்பு சேவை) | 1409 | 11,000,000.00 | 10,558,950.19 |
| உதவு தொகை மற்றும் பங்காளர் நிதி | 1505 | 48,000,000.00 | 4,124,031.01 |
| அரச ஊழியர்களுக்கான சொத்துக் கடன் வட்டி | 1506 | 2,000,000.00 | 1,830,006.65 |
| நட்டம் மற்றும் நீக்குதல் | 1701 | - | - |
| மொத்தம் (மீண்டெழும் செலவினம்) | | **483,698,000.00** | **412,378,110.46** |
| **<u>மூலதன செலவினம்</u>** | | | |
| கட்டம் மற்றும் நிர்மாணிப்பு | 2001 | 5,000,000.00 | 4,922,393.02 |
| இயந்திரம் மற்றும் இயந்திரோபகரணம் | 2002 | 1,000,000.00 | 964,735.19 |
| பராமரிப்பு மற்றும் அபிவருத்தி செய்தல் – வாகனம் | 2003 | 6,000,000.00 | 5,721,961.10 |
| மனைப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 2102 | - | - |
| இயந்திரம் மற்றும் இயந்திரோபகரணம் | 2103 | 1,000,000.00 | 999,135.00 |
| மென் பொருள் அபிவிருத்தி | 2106 | 5,000,000.00 | 2,498,823.00 |
| பணியாளர் சபை பயற்சி | 2401 | 1,000,000.00 | 859,691.46 |
| அபிவிருத்தி உதவிகள் | 2202 | 700,000,000.00 | 655,085,488.14 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 2507 | 2,000,000.00 | 1,979,964.05 |
| மொத்தம் (மூலதன செலவினம்) | | **721,000,000.00** | **673,032,190.96** |
| மொத்தம் (முழுமையான) | | **1,204,698,000.00** | **1,085,410,301.42** |

அட்டவணை இலக்கம் XXVIII

## 2.10. செஸ் வரி அறவீடுகள்.

2007 இலக்கம் 01 கொண்ட செஸ் வரி கட்டளைக்கு அமைய இலங்கையில் இறப்பர் சார்ந்த முடிவுப் பொருள் உற்பத்தி செய்யும் கைத்தொழிலாளர்களிடம் அப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக உள்நாட்டு ரீதியில் கொள்வனவு செய்யப்படும் இயற்கை இறப்பருக்காக கொள்வனவு செய்யப்படும் மூல (கச்சா) இறப்பர் (Raw rubber) 1 கிலோகிராமிற்காக ரூபா 4/- வீதம் செஸ் வரி அறவிடப்படுகின்றது. இதற்கு அமைய 2023 ஆம் ஆண்டில் செஸ் வரி அறவீடு தொடர்பான தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**செஸ் வரியிற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் விபரங்கள் - 2023**

